**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure ) Crl.Misc.39

| | | |
|---|---|---|
| IN THE COURT OF | : | **II ADDITIONAL DISTRICT & SESSIONS COURT, THANJAVUR** |
| Case No. | : | **SC 212/2017** |
| Name of Deponent | : | **PW 1 மணிகண்டன்** |
| Father's Name /Husband Name | : | ராஜவேல் |
| Village | : | |
| Caste | : | |
| Religion | : | |
| Calling | : | |
| Age | : | **41** |

**Solemnly affirmed in accordance with the provisions of Act of 1873 of the day of 18.10.2022.**

**அரசு தரப்பில் முதல் விசாரணை : -**

நான் 17 பரிசுத்தம் நகரில் குடியிருக்கிறேன். Vigensh Agency என்ற Electrical Whole Sale வியாபாரம் நடத்தி வருகிறேன். யாகப்பா நகர் மெயின்ரோடு, 12 வது குழந்தையம்மாள் தெருவில் வீட்டு எண் 204 ல் வசித்து வருகிறேன். இறந்துபோன ரமேஷ் ஐ தெரியும். அவர் என்னிடம் 7 வருடங்கள் வேலை பார்த்தார். ஆஜர் எதிரி ரெனால்டு என்னிடம் டிரைவராக வேலை பார்த்தார். 24.05.2017 ம் தேதி ரமேஷ் பட்டுக்கோட்டை - மன்னார்குடி லைனில் வசூலுக்கு போனார். மறுநாள் காலை 8.30 மணியளவில் என்னுடைய டிரைவர் ஜான் என்பவர் என்னுடைய அலுவலகத்தில் சென்று பார்த்தபோது மாடிப்படியில் இரத்தம் இருந்ததை பார்த்ததும் எனக்கு போன் செய்து இரத்தமாக இருக்கிறது வாருங்கள் என்று சொன்னார். என் அலுவலகத்தின் சாவி ஒன்று ரமேசிடம் இருக்கும். ஒன்று டிரைவர் ஜானிடம் இருக்கும். நான் என் அலுவலக மாடிக்கு போய் பார்த்தபோது ரமேசின் கையில் ஒரு வெட்டும் கழுத்தில் ஒரு காயமும் இருந்தது. பார்த்ததுமே அவர் இறந்துபோனது தெரிந்தது. நான் அவர் வீட்டிற்கு தகவல் தெரிவித்துவிட்டு தஞ்சாவூர் தெற்கு காவல்நிலையத்திற்கு போய்விட்டேன். வீட்டிற்கு என்றால் அவரது மனைவிக்கு தகவல் தெரிவித்தேன். நான் புகார் கொடுத்தேன். போலிசார் என்னுடன் எங்கள் அலுவலகத்திற்கு வந்து பார்த்தார்கள். போலிசார் வந்து பார்த்துவிட்டு தோள்பட்டையிலும் நெற்றியிலும் இருந்த காயத்தை காண்பித்தார்கள். அது

கொலையாக இருக்கும் என்று சொன்னார்கள் என்னையும் விசாரித்தார்கள். என்னிடம் காண்பிக்கப்படுவது நான் கொடுத்த புகார் தான். அதிலிருப்பது என்னுடைய கையொப்பம்தான். புகார் **அசாஆ 1.** முதல்தகவல் அறிக்கை 14 வது காலத்தில் உள்ளது என்னுடைய கையொப்பம்தான். போலிசார் பாடி போஸ்ட்மாட்டத்திற்கு அனுப்பி அன்று மாலை மீண்டும் என் அலுவலகத்திற்கு வந்து பார்த்தார்கள். எங்களிடம் விசாரித்தார்கள். நான் போலிசாருடன் வந்து 25ம் தேதி காலையில் பார்த்தபோது அங்கு கலெக்சனுக்குபோன ரமேசின் கலெக்சன்நோட் மட்டும் இருந்தது. கலெக்சனுக்கு போனால் கலெக்சன் நோட், டைரி மற்றும் Cash பேக் இருக்கும். நாங்கள் பார்த்தபோது கலெக்சன் நோட்டும் Cheque leaf ம் மட்டும் கிடந்தது. Cash பேக் இல்லை. அந்த செக் கஸ்டமர் கொடுத்தது. அந்த செக்கையும் நோட்டையும் காண்பித்தால் என்னால் அடையாளம் காட்டமுடியும். என்னிடம் காட்டப்படும் செக் கஸ்டமர் எங்களுக்கு கொடுத்தது. அந்த செக் **அசாஆ 2**. என்னிடம் காட்டப்படும் பைதான் எங்களுடைய கேஸ்பேக் கருப்புநிற **அசாபொ1**. என்னிடம் காட்டப்படும் நோட் புத்தகம் எங்களுடைய கலெக்சன் நோட்டாகும். அதில் கதிரேசன் பேப்பர் ஸ்டோர் மதுரை என்று எழுதியிருக்கும். அதிலுள்ள விவரங்கள் ரமேசின் கையெழுத்தில் எழுதப்பட்டுள்ளது. சம்பவத்திற்கு முதல்நாள் கலெக்சன் படி ரூ.1,99,000/- உள்ளது. அந்த நோட்டு **அசாபொ2**. போலிசார் விசாரித்தபோது ரெனால்டு என்னிடம் 6 மாதத்திற்கு முன்பு வேலை செய்ததாகவும் அவரது கேரக்டர் சரியில்லாததால் அவர் போய் விட்டார் என்றும் சொன்னேன். நான் விசாரணைக்குப்பிறகு பழைய நீதிமன்றத்தில் ரெக்கவரி செய்த செக் என்று சொல்லி எனக்கு ஒரு செக் கொடுத்தார்கள் அதில் தொகை ரூ.79 ஆயிரம் சொச்சம் இருந்தது. தொகை எனக்கு சரியாக தெரியவில்லை. நாளாகி விட்டதால் செல்போன் வாங்கினேனா என்று நினைவில் இல்லை. போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>1, 2 எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை</u>**

அசாஆ 2 செக் சம்பவ இடத்தில் நோட்டுடன் கிடந்த செக்தான். சம்பவ இடத்தில் இருந்து அந்த செக்கை போலிசார் 25.05.2017 அன்று எடுத்துசென்றுவிட்டார்கள். அசாபொ1 பேக் மார்க்கெட்டில் தஞ்சாவூரில் கிடைக்கக்கூடியதா என்றால் நான் தஞ்சாவூரில் பார்க்கவில்லை. எங்கள் கம்பெனிக்கு சென்னையில் கொடுத்து ஆர்டர் செய்வோம். இந்த பேக்கை பார்த்தால் சென்னையில் வாங்கப்பட்ட பேக் என்பதற்கு அடையாளம் எதுவும் இல்லை. நான் போலிசாரிடம் கருப்புகலர் பேக் என்றுதான் சொன்னேன். வேறு எந்த அடையாளமும்

சொல்லவில்லை. போலிசார் அசாபொ1 ஐ தெற்கு காவல்நிலையத்தில் வைத்து என்னிடம் காண்பித்தார்கள். காண்பித்த தேதி 30.05.2017 என்றால் தெரியாது. அசாபொ2 எங்களுடைய நோட்டுதான். அது புதிய நோட்டு அல்ல. 2017 ஆம் ஆண்டு நோட்டு. அந்த நோட்டில் ரமேசும், மூர்த்தி என்ற மற்றொரு staff ம் எழுதுவார்கள். அசாபொ 2 நோட்டில் 2 விதமான கையெழுத்துக்கள் உள்ளன என்றால் சரிதான். ஜான் என்பரின் முழுப்பெயர் ஜான்இருதயராஜ். அசாபொ2 நோட்டை 2017 ஆம் ஆண்டில் வாங்கினோமா என்றால் 2017 மார்ச் மாத கடைசியில் வாங்கியிருக்கலாம். அந்த நோட்டை போலிசார் சம்பவத்தன்றோ அல்லது மறுநாளோ வாங்கிசென்றுவிட்டார்கள். எங்கள் அலுவலகத்திற்கு வந்து வாங்கிசென்றுவிட்டார்கள். பேக்கை சென்னையில் ஆர்டர் செய்து வாங்கியதாக பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. அசாபொ1 போலிசார் வழக்கிற்காக தயார் செய்தது என்றால் சரியல்ல எங்களுடையதுதான். போலிசார் கேட்டுக்கொண்டதற்கிணங்க அசாபொ2 நோட்டில் உள்ள விவரங்கள் தயார் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. போலிசார் விசாரித்தபோது ரெனால்டுக்கு கேரக்டர் சரியில்லை என்று நிறுத்திவிட்டோம் என்று சொல்லவில்லை என்றால் சரியல்ல சொல்லியிருக்கிறேன். ஜானை கடைத்திறக்க அனுப்பியதாக புகாரிலும் போலிசாரிடமும் சொன்னேனா என்றால் ஜானிடம் சாவி இருக்கும் அவர் கடை திறக்க போனார். ஜான் வழக்கம் போல கடையைதிறக்கபோனபோது பார்த்ததாக போலிசாரிடம் சொல்லியிருக்கிறேன். புகாரில் சொல்லவில்லை. மன்னார்குடி அய்யன் எலக்ரிகல்ஸ் பட்டுக்கோட்டை ஏசியா பசிபிக் கம்பெனி, தம்பிக்கோட்டை லட்சுமி டிரேடர்ஸ் ஆகியவை தற்போதும் இயங்கி வருகிறது. எங்கள் கம்பெனியில் பிரேமா என்பவர் கம்யூட்டர் ஆப்ரேட்டர். சம்பவத்தின்போது திருமணம் ஆகவில்லை. ரேவதி என்பவர் பில்லிங் ஆப்ரேட்டர். மூர்த்தி என்பர் சேல்ஸ்மேன், பீட்டர் என்பவர் பார்சல் கட்டுபவர். 25 ம் தேதியிலிருந்து 30 ம் தேதி வரை நானும், பீட்டரும், மூர்த்தியும் 1 வது எதிரி ரெனால்டும் தெற்கு காவல்நிலையம் சென்று விசாரணைக்கு ஒத்துழைப்பு கொடுத்தோம் என்றால் சரிதான். பிரேமாவின் தம்பி ரமேசிடம் பிரச்சனை செய்ததாக போலிசார் 25-30 தேதிக்குள் தெற்கு காவல்நிலையத்திற்கு வரவழைத்து விசாரித்தார்கள் என்றால் இல்லை. எங்கள் அலுவலகத்திற்கு எதிர்த்தார்போல் உமாமகேஷ்வரி என்ற மருத்துவரின் வீடு உள்ளது என்றால் எனக்கு ஞாபகம் இல்லை. கடைக்கு எதிர்த்தார்போல் ஐய்யப்பன் கோயில் இல்லை சற்று தள்ளி இருக்கிறது. வரிசையாக வீடுகள் இருக்கிறது என்றால் சரிதான். எங்கள் அலுவலகம்

இருப்பது யாகப்பா நகர் - அண்ணாநகர் செல்லும் மெயின்ரோடு என்றால் சரிதான். 1வது எதிரியின் மனைவி சம்பவ சமயத்தில் பி.டெக் படித்துவிட்டு வேலையில் இருந்தால் என்றால் தெரியாது. நீதிமன்றத்தில் எனக்கு செக்கோ, டிடியோ கொடுத்தார்கள். ரொக்கமாக கொடுக்கவில்லை. யாகப்பநகர் திரும்பும் இடத்தில் போலிசார் CCTV சம்பவ சமயத்திலும் தற்போது பொருத்தியிருந்தார்கள் என்றால் தற்போது இருக்கிறது. சம்பவ சமயத்தில் இல்லை. இறந்துபோன ரமேஷ் குடும்பத்திற்கு என் தந்தை ரூ.10 இலட்சம் கொடுத்தாரா என்றால் தொகை தெரியவில்லை, ஆனால் பணம் கொடுத்தார். என்னுடைய தந்தைக்கு கீழராஜவீதியில் தேவி எலக்ரிகல்ஸ் என்று ஒரு கடை உள்ளது. என்னுடைய விக்னேஷ் எலக்ரிகல்ஸ் கடையும் என் அப்பா உடையதுதான். என் அப்பாவிற்கு இரண்டு கார்கள் உள்ளன. ஒரு வீடு உள்ளது. என் அப்பா பெயர் சொன்னால் தஞ்சாவூரில் தெரியுமளவிற்கு செல்வாக்கான நபர். ரெனால்டை கைது செய்வதற்கு முதல்நாள் போலிசார் நோட்டில் உள்ள கையெழுத்தை பற்றி விசாரிப்பதற்காக காவல்நிலையத்திற்கு என்னை வரச்சொன்னார்களா என்றால் ஞாபகமில்லை. 30.05.2017 ஆம் தேதி எதிரிகள் இருவரையும் காவல்நிலையத்தில் காலை 7.00 மணிக்கு பார்த்தேனா என்றால் காலை 10.00 மணிக்கு பார்த்தேன். எனக்கும் ரமேசுக்கும் ஒரே பெண்ணுடன் தொடர்பில் இருந்ததாகவும் அதனால் நான் ரமேஷ் மீது மனகசப்பில் இருந்ததாகவும் அதை ரமேஷ் மனைவியிடம் ரமேஷ் சொன்னதாகவும், இறந்தபிறகு ரமேசின் மனைவி வந்து பார்த்தபோது ரமேஷ் சாவில் என் மீது சந்தேகம் இருப்பதாக கூறியதாகவும் அதனடிப்படையில்தான் போலிசார் 30ம் தேதிவரை என்னை தெற்கு காவல்நிலையத்தில் வைத்து விசாரித்தார்கள் என்றும் என் னை வழக்கிலிருந்து காப்பாற்றுவதற்காக என் தகப்பனார் ரமேஷ் மனைவிக்கு பணம் கொடுத்தார் என்றால் சரியல்ல. இந்த கேள்வியை கேட்பதற்கு அரசு தரப்பு வழக்கறிஞர் கடுமையாக ஆட்சேபணை தெரிவித்தார்.

நான் சொல்ல என் உத்திரவுப்படி
தட்டச்சிடப்பட்டு, என் முன்னிலையிலும்,
மேற்பார்வையிலும், சாட்சிக்குப் படித்துக்
காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரியென்று
ஒப்புக்கொள்ளப்பட்டது.

(ஒ.ம்.) அ. மலர்விழி,
2வது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி,
தஞ்சாவூர்.